# உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு சம்பந்தமான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை - 2010 ஆம் ஆண்டு

## 1. ஒதுக்கீட்டுத் தலைப்பு 130 – உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சின் 2010 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிஅறிக்கைகள், இணக்கக்கூற்றுகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய அறிக்கைகளை உள்ளடக்கிய ஒதுக்கீட்டுக் கணக்குகள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2011 திசெம்பர் 13 ஆந் திகதி அமைச்சின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகளினதும் இணக்கக்கூற்றுக்களினதும் மீளாய்வின் அடிப்படையிலும் கொடுக்கல் வாங்கல்களின் மாதிரிகளினது போதியளவு செவ்வை பார்த்தலின் அடிப்படையிலும் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும் செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் அளவும் எனக்குக் கிடைப்பதற்குள்ள பதவியணியினர், ஏனைய மூலவளங்கள், நேரம் என்பவற்றிற்கமைய இயலுமானளவு விரிவான கணக்காய்வை உள்ளடக்கக் கூடியவாறிருந்தது.

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் சம்பந்தமாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்களை இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிருவாக பிரமாணங்களுக்கிணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும். மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாட்டைத் திட்டமிடுதல், அமுல்படுத்துதல் மற்றும் பராமரித்தல் போன்றன இப்பொறுப்பில் உள்ளடங்குகின்றன.

| பதிவேடுகளின் வகை | உரிய பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| சம்பவத்திரட்டுப் புத்தகம் | நிதிப்பிரமாணம் 1645 | நாளதுவரையாகப் பேணப்பட்டிருக்கவில்லை |
| நிலையான சொத்துப்பதிவேடு | 1978 திசம்பர் 19 ஆந் திகதிய திறைசேரிச்சுற்று நிருப இல. 842 | 2009 ஆம் ஆண்டிற்கு முன்னுள்ள பதிவுகள் காணப்படாமை |

## (இ) ஒதுக்கீட்டுக் கணக்கு

### (i) மொத்த ஏற்பாடுகள் மற்றும் செலவுகள்

அமைச்சின் மொத்தத் தேறிய ஏற்பாடு ரூபா 7,833,480,000 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் இறுதிவரையில் இதில் ரூபா 7,046,692,826 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம் அமைச்சின் ஏற்பாட்டில் தேறிய சேமிப்பு ரூபா 786,787,174 தொகை அல்லது மொத்த தேறிய ஏற்பாட்டில் 10 % ஆக இருந்தது. விபரம் பின்வருமாறு.

| ஒதுக்கீட்டுத் தலைப்பு | அமைச்சு | தேறிய ஏற்பாடுகள் | | பயன்பாடுகள் | | சேமிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் | மீண்டுவருபவை | மூலதனம் |
| | | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. | ரூபா. |
| 130 | உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சு | 155,844,000 | 7,677,636,000 | 143,901,767 | 6,902,791,059 | 11,942,233 | 774,844,941 |

## (ஈ) பொது வைப்புக் கணக்கு

2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அமைச்சின் பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 70,358,035 ஆக இருந்ததுடன் இது தொடர்பான காலப்பகுப்பாய்வு கீழே தரப்படுகின்றது.

| அமைச்சு | தலைப்பு | காலப்பகுப்பாய்வு<br>1 வருடத்திற்கு குறைவு | <br>1 வருடத்திற்கு மேல் 2 இற்கு குறைவு | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா |
| உள்ளூராட்சி, மாகாண சபைகள் | 130 | 65,620,098 | 4,737,937 | 70,358,035 |

**(உ) கட்டுநிதிக் கணக்கு**

நிதிப் பிரமாணம் 371 இற்கு முரணாக செயல்நிமித்த உப கட்டுநிதி வழங்கப்பட்டு செய்பாடுகள் முடிவடைந்து 3 மாதங்கள் வரையான தாமதத்தில் கட்டுநிதிகள் தீர்க்கப்பட்டிருந்தன.

## 1.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

ரூபா 29,577,000 பெறுமதியான அமைச்சின் 5 வாகனங்கள் முறையே காணி மற்றும் காணி அபிவிருத்தி அமைச்சிற்கு 3 வாகனங்களும், இலங்கை உள்ளூர் ஆளுகை நிறுவகத்திற்கு 1 வாகனமும், உள்ளூராட்சி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திச் செயற்திட்டத்திற்கு 1 வாகனமுமாக விடுவிக்கப்பட்டிருந்ததுடன் முறையாகக் கையளிக்கப்பட்டிருக்கவும் இல்லை.

## 1.5 இணக்கமின்மைகள்

**(அ) சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான இணக்கமின்மைகள்**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண அறிவுறுத்தல்களுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் விபரித்துக் கீழே காட்டப்படுகின்றது.

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | பெறுமதி | இணக்கமின்மைகள் |
|---|---|---|